# **க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானத்துறை (பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், உயிரியல்) மற்றும் பொது ஆங்கில பாடத்திற்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வும் பிரயோகப் பரீட்சையும் - 2021**

**1)** செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களால் 2020.11.25, 2020.12.10 ஆம் திகதிகளில் தினக்குரல், உதயன், வலம்புரி, தினமின பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் மற்றும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதுமான விளம்பரத்திற்கு அமைவாக, **வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானத்துறை மற்றும் பொது ஆங்கிலப் பாடம் ஆகியவற்றுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1(அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2020** இற்கு விண்ணப்பித்திருந்தவர்களில் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் 2021.02.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 97 தமிழ் மொழி மூல பட்டதாரிகளின் விபரங்கள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

**2)** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் **01.04.2021 (வியாழக் கிழமை), 02.04.2021 (வெள்ளிக் கிழமை)** ஆம் திகதிகளில் காலை **9.00 மணி** முதல் **செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள **வட மாகாண கல்வி அமைச்சில்** நடைபெறவுள்ளது. மேற்குறித்த நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

**3)** பொது ஆங்கில பாடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் 2021.04.01 ஆம் திகதியும் கணித, விஞ்ஞானத் துறைப் பாடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் 2021.04.01, 2021.04.02 ஆம் திகதிகளிலும் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் வருகைதர வேண்டிய தினம் மற்றும் நேரம் இத்துடன் வெளியிடப்படும் தெரிவுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** நேர்முகத்தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இணையத்தளத்தில் வெளியிடப்படும் பட்டியலின் அடிப்படையிலேயே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக அமைச்சினால் உரிய பட்டதாரிகளுக்கு தொலைபேசி மூலமாக அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும் உரிய தினத்தில் வட மாகாண கல்வி அமைச்சிற்கு சமுகமளித்து தமக்குரிய நேர்முகத்தேர்வுக் கடிதத்தின் மூலப் பிரதியினைப் பெற்று நேர்முகத்தேர்வுக்கு தோற்ற முடியும்.

**5)** நேர்முகத்தேர்வுக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகள் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

5.1 தேசிய அடையாள அட்டை (தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது உமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் புகைப்படத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்கள்.

5.2 பிறப்புப் பதிவுப் புத்தகம் (பெயரில் வித்தியாசமிருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்)

5.3 விவாகச் சான்றிதழ் (திருமணமான பெண்கள் மட்டும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)

5.4 க.பொ.த.(சா/த) சான்றிதழ்

5.5 க.பொ.த.(உ/த) சான்றிதழ்

5.6 பட்ட விபரக் கூற்று (Statement / Transcript)

5.7 பட்டச் சான்றிதழ் (பல்கலைக்கழக / நிறுவன மூதவையால் அங்கீகரிக்கப்பட்டு பதிவாளரால் ஒப்பமிடப்பட்ட பட்டச் சான்றிதழ் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்)

5.8 விரிவான பெறுபேற்று அட்டவணை (Detailed Results Sheet)

5.9 இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்

5.10 கிராம உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் வதிவிட, குணநலச் சான்றிதழ்

5.11 கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட “தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் விபரங்களைக் குறிப்பிட்டுக் கொள்வதற்காக வழங்கப்படும் படிவம்” (உடன் முன்னரான 03 வருட காலத்திற்குரியதாக இருத்தல் வேண்டும்)

5.12 பாடசாலை விடுகைப் பத்திரம்

5.13 வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவை தொடர்பான சான்றிதழ்கள்

**6)** இந்நேர்முகத்தேர்வு தொடர்பாக பயணச் செலவு எதுவும் வழங்கப்படமாட்டாது. இவ்வழைப்பு விண்ணப்பதாரரது தகைமைகளைப் பரிசீலிப்பதற்காகவேயன்றி நியமனம் வழங்குவதற்காக அல்ல என்பதனையும் கவனத்திற் கொள்ளவும். நேர்முகத் தேர்வின்போது அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் நியமனத்திற்கான உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது. மேலும் தொலைபேசி மூலமான அழைப்பு மற்றும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தலைப் பின்பற்றி உரிய தினத்தில் சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் இந் நியமனத்தை அவசியமற்றதெனக் கருதுவதாகத் தீர்மானித்து நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**7)** கீழ்க் குறிப்பிடப்படும் அடிப்படையில் விண்ணப்பதாரர் நேர்முகத்தேர்வுக்கும் பிரயோகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுகின்றார்கள்.

விண்ணப்பதாரர் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பித்ததன் அடிப்படையிலும் அதன் பின்னர் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் 2021.02.06 ஆம் திகதி நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்றதன் அமைவிலும் தகைமைகளைப் பரிசீலிப்பதற்காக நேர்முகத்தேர்வுக்கும் பிரயோகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுகின்றார்கள்.

பிரயோகப் பரீட்சை தொடர்பான விபரம் வருமாறு:

i. பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் கீழ்க் குறிப்பிடப்படும் 05 தலைப்புக்களின் நோக்கத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையில் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் எண் | பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| **01** | நோக்கம் மற்றும் பிரவேசம் (Objective and the approach) | 05 | 02 |
| **02** | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு (Personality and voice control) | 05 | 02 |
| **03** | தொடர்பாடலில் தெளிவு (Clarity in the communication) | 05 | 02 |
| **04** | நேர முகாமைத்துவம் (Time management) | 05 | 02 |
| **05** | முன்வைப்பு நுட்பங்கள் (Usage of Techniques of Presentation) | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |

ii. பிரயோக பரீட்சை முறைகள்:

1. விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் எட்டு (8) நிமிடங்களை விட குறையாத வகையில் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. பிரயோக பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு 25 ஆகும்.
3. பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்காக அவ்வவ் ஒப்பளவுகளுக்காக குறைந்த பட்சம் 2 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

iii. ஒப்பளவுகளின் நோக்கம்:

1. நோக்கம் மற்றும் பிரவேசம் (Objective and the approach)
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.
2. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு (Personality and voice control)
ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த நிர்வாகக் கட்டுப்பாடுகள் கொண்ட இயலுமைகள் காணப்படல்.
3. தொடர்பாடலில் தெளிவு (Clarity in the communication)
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.
4. நேர முகாமைத்துவம் (Time management)
பெற்றுக்கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.
5. முன்வைப்பு நுட்பங்கள் (Usage of Techniques of Presentation)
நோக்கத்தை எட்டுவதற்கான சமர்ப்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

<u>குறிப்பு:</u>

1. விண்ணப்பதாரர்களுக்கான பிரயோகப் பரீட்சை தொடர்பாக நேர்முகத்தேர்வுக் கடிதத்துடன் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பித்துள்ள பாடத்திற்கு அமைவாக அப் பாடத்திற்குரிய ஆசிரியத் தொழிலை ஆற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரா என்பதனை பரிசீலிக்கும் வகையில் மேலே 7.i. இல் தரப்பட்ட 5 விடயப்பரப்புக்களின் கீழ் பிரயோகப் பரீட்சை நடைபெறும்.
2. பிரயோகப் பரீட்சைக்கான பாடத்திட்டம் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் அவ் விபரம் இத்துடன் வெளியிடப்படுகின்றது.
3. இப் பிரயோகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டை ஒத்த வடிவில் தயார்ப்படுத்தி வருகைதருதல் போதுமானதாகும். காட்சிப்படுத்தல் மூலம் விளங்கப்படுத்த விண்ணப்பதாரர் விரும்பினால் தாம் தெரிவு செய்த பகுதியை பிறிசில் போட் / காட் போட் அட்டை மூலமாக காட்சிப்படுத்தி விளங்கப்படுத்த முடியும் அல்லது **<u>கணினி மற்றும் பல்லூடக எறியி (Computer & Multimedia projector) மூலம் காட்சிப்படுத்தலை மேற்கொள்ள விரும்பினால் அவ்வாறு காட்சிப்படுத்தலை மேற்கொள்ளலாம். இவ் உபகரணம் தங்களுக்கு தயார் நிலையில் வழங்கப்படும். எனவே விண்ணப்பதாரர் கற்பித்தல் தொடர்பான முன்னளிக்கையினை (Presentation) பொருத்தமான முறையில் கொண்டு வருதல் அவசியமாகும்.</u>**
4. இதில் தெரிவிக்கப்படாத விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவை தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

**8)** ஆட்சேர்ப்பு விளம்பரம் தொடர்பில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் தாங்கள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

**9)** நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை தொடர்பில் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம் அவர்களால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் தாங்கள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

**10)** தெரிவு செய்யப்படும் முறைகள்:

நேர்முகத்தேர்வில் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு தகுதி பெறும் விண்ணப்பதாரர் பிரயோகப் பரீட்சையிலும் வேண்டப்பட்ட புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில் நியமனம் பெறுவதற்கான தகுதியினைப் பெற்றுக்கொள்வார்.

<u>கவனத்தில் கொள்ள வேண்டியது:</u>

நேர்முகத்தேர்வுக்காக சகலரும் அழைக்கப்படுகின்றார்கள். தற்பொழுது நடைமுறையிலுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம், நேர்முகத்தேர்வில் சகலரும் தகைமைகளை உறுதி செய்து கொண்டாலும் கூட நியமனம் வழங்கப்படுவது ஆட்சேர்ப்பின் போது கோரப்பட்ட வெற்றிட எண்ணிக்கையின் அளவினால் மட்டுமேயாகும்.

## 11) பிரயோகப் பரீட்சைக்கான பாடத்திட்டம்

| இல. | விண்ணப்பித்த பாடம் | தயார் செய்ய வேண்டிய விடயப்பரப்பு |
|---|---|---|
| 1 | பௌதிகவியல் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பௌதிகவியல் பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் தரம் 12, தரம் 13 இற்குரிய புதிய மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் (Syllabus), ஆசிரியர் வழிகாட்டி (Teacher's Guide) இன் உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher's Guide) |
| 2 | இரசாயனவியல் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) இரசாயனவியல் பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் தரம் 12, தரம் 13 இற்குரிய புதிய மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் (Syllabus), ஆசிரியர் வழிகாட்டி (Teacher's Guide), வள நூல் (Resource Book) இன் உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher's Guide / Other Material – Chemistry Resource Book) |
| 3 | இணைந்த கணிதம் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) இணைந்த கணித பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் வழிகாட்டி (Teacher's Guide) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher's Guide) |
| 4 | உயிரியல் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) உயிரியல் பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் தரம் 12, தரம் 13 இற்குரிய புதிய மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் (Syllabus), ஆசிரியர் வழிகாட்டி (Teacher's Guide), வள நூல் (Resource Book) இன் உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher's Guide / Other Material – Biology Resource Book) |
| 5 | பொது ஆங்கிலம் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பொது ஆங்கில பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த தேர்ச்சிகளில் குறித்த ஒரு தேர்ச்சி மட்டத்தை தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் வழிகாட்டியின் (Teacher's Guide) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher's Guide) |

குறிப்பு :

i. **பொது ஆங்கில பாட பட்டதாரிகள் 2021.04.01 ஆம் திகதி நேர்முகத்தேர்வுக்கும் பிரயோகத் தேர்வுக்கும் தோற்ற முடியும்.**

ii. **கணித, விஞ்ஞானத் துறையைச் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் 2021.04.01, 2021.04.02 ஆம் திகதிகளில் நேர்முகத்தேர்வுக்கு தோற்ற முடியும். இவர்களுக்கான பிரயோகத்தேர்வு 2021.04.03, 2021.04.04 ஆம் திகதிகளில் நடைபெறும் என்பதுடன் அது பற்றி கல்வி அமைச்சினால் நேர்முகத்தேர்வில் வெற்றியீட்டிய விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.**

**12)** நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகள் கீழ்வரும் கொவிட் - 19 பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்த வேண்டும் என இத்தால் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

1. நேர்முகத்தேர்விற்காக வருகைதரும் சகல பட்டதாரிகளும் கொவிட் - 19 பாதுகாப்பு முறைகளை முறையாகக் கடைப்பிடிப்பதுடன் முகக் கவசம் (Face Mask) அணிந்திருத்தல் அவசியமாகும்.
2. விண்ணப்பதாரர்கள் அல்லது அவ் விண்ணப்பதாரரைச் சார்ந்தவர்கள் கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகியிருப்பின் / விண்ணப்பதாரருக்கு தொற்றிருக்கலாம் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் அல்லது அவ் விண்ணப்பதாரரைச் சார்ந்தவர்களுக்கு தொற்று இருக்கலாம் எனும் அடிப்படையில் விண்ணப்பதாரர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் சுயதனிமைப்படுத்தலில் இருப்பார்களேயானால் அவர்கள் நேர்முகத்தேர்விற்கு வருகை தருதல் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது பற்றி தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக மட்டும் தகவல் வழங்க முடியும்.

மேற்குறித்த விடயம் தொடர்பாக விண்ணப்பதாரர்கள் மிக அவதானமாக செயற்பட்டு தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் பாதுகாப்பதற்கு உதவுவீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**<u>முக்கியம் :</u>**

i. நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டு கொவிட் - 19 காரணமாக வருகைதரமுடியாதவர்கள் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக தகவல் அளித்திருப்பின் அவர்களுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையினை நடாத்துவதற்குத் தேவையான ஒழுங்குகள் வட மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ii. இதனால் விண்ணப்பதாரர்கள் எவ்வித அசௌகரியங்களையும் எதிர்கொள்ளத் தேவையில்லை என அறிவிக்கப்படுகிறது.

iii. மின்னஞ்சல் ஊடாக தகவல் அளிக்கப்பட்டதும் அதற்கான பதில் எழுத்து மூலமாக வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 021 223 1343

மின்னஞ்சல் முகவரி : appointmentmoe@gmail.com